# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 10.10.2025**

**OS No. : 315/2021**

**Dw : 1**

**Name : திரு. அனிபா**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

நான் தாக்கல் செய்துள்ள பென்டிரைவில் உள்ள வீடியோ பதிவுகளை எடுத்த ஜாகீர் உசேன் என்பவர் என்னுடைய அண்ணன் மகன் என்றால் சரிதான். பென்டிரைவில் உள்ள வீடியோ பதிவுகள் குறித்த விவரம் என்னுடைய மகன் மதார் மைதீனுக்கும், வீடியோ எடுத்த ஜாகீர் உசேனுக்கும் மட்டும்தான் தெரியும் என்றால் சரிதான். மேற்படி வீடியோ ஜாகீர் உசேனால் அவருடைய செல்போனில் படமாக்கப்பட்டது. ஜாகீர் உசேனின் செல்போனை வாங்கி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். மதார் மைதீன் மற்றும் ஜாகீர் உசேனை இந்நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்கப்போகிறேனா என்றால் அதுகுறித்து என்னுடைய வழக்கறிஞரிடம் கேட்கவேண்டும். ஷாஜகானிடம் எப்போது என்னுடைய அசல் பத்திரங்களை கொடுத்தேன் என்றால் அது நியாபகமில்லை. எனக்கு வழக்கு பற்றிய விவரங்கள் மற்றும் வீடியோ பதிவுகள் குறித்த விவரங்கள் நன்கு தெரியும் என்றும், வழக்கிற்காக அவற்றை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi